# மாதிரி வினாத்தாள்

# வணிகவியல்

# மேல்நிலை இரண்டாமாண்டு

காலம் : 3 மணி **பகுதி அ** மதிப்பெண் : 200

**(I)** எல்லா கேள்விகளுக்கும் பதில் எழுதுக. **40 x 1 = 40**

**(II)** எல்லா கேள்விகளுக்கும் சமமதிப்பெண் உண்டு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கூட்டாண்மை ஏற்படுவது

அ. சட்டத்தின் படி ஆ. வெளிப்படுத்திய உடன்படிக்கையின்படி

இ. வெளிப்படை அல்லது உட்கிடை உடன்படிக்கையின்படி

ஈ. வம்சாவழி சொத்துரிமையின்படி

2. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள்

அ. பேரளவு வியாபாரம் ஆ. நடுத்தர வியாபாரம் இ. சிற்றளவு வியாபாரம்

3. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது

அ. ஒப்பந்தத்தால் ஆ. கூட்டாளிகளிடையே உறவு இ. அரசின் வழிகாட்டல்

4. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ. 2 ஆ. 3 இ. 7 ஈ 10

5. ஒரு பொதுவரையறை நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் மதிப்பு

அ. ரூ5000க்கு ஆ. ரூ 5,00,000க்கு இ. 50,000க்கு ஈ ரூ,500க்கு

6. நன்மையே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர் எனப்படுவர்.

அ. கலைமான் ஆ. காளை இ. முடடிவாத்து ஈ கரடி

7. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது

அ. கடன் ஆ. சேவை இ. சரக்குகள் ஈ ரொக்கம்

8. பொதுமக்களும் இந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்

அ. துறைவாரி அமைப்பு ஆ. பொதுக்கழகம்

இ. அரசு நிறுமம் ஈ மேற்கூறிய நிறுவனங்கள் ஏதுமில்லை

9. ஒரு பன்னாட்டு நிறுமம் ___________என அழைக்கப்படுகிறது.

அ. உலக அளவில் பெரியது ஆ. கூட்டாண்மை

இ. கூட்டுறவு சங்கங்கள் ஈ. பொது கூட்டுறவு

10. கூட்டாண்மை பதிவு

அ. கட்டாயம் ஆ. விருப்பத்தின் பேரில் இ.அவசியமில்லை

11. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை -(table-A) என்பது

அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்

இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

12. நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது______________

அ. அரசால் ஆ. இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

இ. இயக்குனர் அவையால்

ஈ ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் நியமிக்கப் பெறுகிறார்.

13. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை

அ. 20 ஆ. 21 இ. 22 ஈ 24

14. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது

அ. கிராமங்களில் மட்டும் ஆ. கிராமங்களிலும் நகரங்களிலும்

இ. பெரு நகரங்கள் மட்டும் ஈ நகர்ப்புறங்களில் மட்டும்

15. பொதுக் கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது.

அ. வரையறுக்கப்பட்ட சுதந்திரம்

ஆ. செயல்பாட்டு சுதந்திரம்

இ. கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம்

ஈ. வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

16. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்

அ. 1949 சட்டம் ஆ. 1956 சட்டம் இ. 1932 சட்டம்

17. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் (Debenture-holders) என்பவர், அதன்

அ. கடனாளர்கள் ஆ. உறுப்பினர்கள்

இ. கடன் வாடிக்கையர் ஈ. நிறுமத்தில் கடன்

18. ஒரு இயக்குநர்

அ. நிறுமத்தின் முகவராக (Agent)

ஆ. நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக (Trustee)

இ. நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ. மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார்.

19. இது புதிய நிறுமங்களில் முதல் விடுப்புகளை வெளியிடும்

அ. முதன்மைச் சந்தை ஆ. இரண்டாம் நிலை சந்தை

இ. பொருட்கள் சந்தை ஈ. ஒழுங்குமுறை விற்பனை சந்தை

20. தகவலறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.

அ. 90 நாட்கள் ஆ. 120 நாட்கள் இ. 130 நாட்கள் ஈ. 60 நாட்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக:

21. தமிழ்நாடு மின்சார வாரியம் _____________ க்கு எடுத்துக்காட்டாகும்.

22. தனியாள் வணிகரின் பொறுப்பு _____________.

23. இந்தியாவில் கூட்டாளியின் பொறுப்பு _____________.

24. தனிவரையறை நிறுமமொன்றில் குறைந்தளவு உறுப்பினரின் எண்ணிக்கை _____________.

25. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான _____________.

26. முதன்மைச் சந்தையில் _____________ பங்குகளின் வணிகம் நடைபெறுகிறது.

27. கோப்பரெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் _____________.

28. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் _____________.

29. தனியாள் வணிகம் துவங்க _____________ தேவை.

30. வங்கித் தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிக பட்ச உறுப்பினரின் எண்ணிக்கை_____________.

31. தனிவரையறை நிறுமத்தில் குறைந்தது _____________ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.

32. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக _____________ இல் பெயரிட்டிருப்பர்.

33. பங்குகள் _____________ உரிமையைக் குறிக்கும்.

34. சிறப்பங்காடிகள் எனப்படுவது பேரளவில் செயல்படும் _____________ அமைப்பு.

35. _____________துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படும்.

36. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப-நட்டம் _____________ பகிர்ந்தளிக்கப்படுகிறது.

37. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் _____________ என அழைக்கப்படுகின்றன.

38. செயல்முறை விதிகள் மாற்றம் செய்ய _____________ தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

39. ஆரம்ப பொது வெளியீட்டிற்கு (Initial public offering) மாற்றாக (substitute) _____________ இருக்கின்றன.

40. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை _____________ என்றழைக்கிறோம்.

## பகுதி - ஆ **10 x 4 = 40**

ஏதேனும் 10 கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

எல்லா கேள்விகளுக்கும் சம மதிப்பெண் உண்டு

பதில் 4 வரிகளுக்குமிகாமல் இருக்கவும்.

41. அமைப்பை வரையறு?

42. கர்த்தா என்பவர் யார்?

43. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?

44. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

45. ஒரு கூட்டாண்மையின் உட்கிடை ஆணையுரிமைக்கு வரைவிலக்கணம் தருக.

46. அரசு நிறுமம் என்றால் என்ன?

47. பங்கு முனைமம் (Premium) என்றால் என்ன?

48. சட்ட முறை அறிக்கை என்றால் என்ன?

49. நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?

50. பொது வெளியீடு என்றால் என்ன?

51. பட்டியலிடுதல் என்றால் என்ன?

52. கூட்டுறவு - வரையறு?

53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?

54. அரசுத் தொழில் என்பதன் வரைவிலக்கணம் தருக.

55. பொதுக்கழகத்தின் மேலாண்மை. பற்றிக் குறிப்பிடுக.

பிரிவு - இ

ஏதேனும் 5 கேள்விகளுக்கு பதில் எழுதுக.

எல்லா கேள்விகளுக்கும் சம மதிப்பெண் உண்டு

பதில் ஒரு பக்கத்துக்கு மிகாமல் இருக்கவும்.

**5 x 8 = 40**

56. இந்து கூட்டுக்குடும்பம் பற்றி சிறு குறிப்பு வரைக.

57. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?

58. கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெறுவதற்குத் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்கள் பற்றி சுருக்கமாக கூறுக.

59. அமைப்பு முறை ஏடு (Memorandum of Association) என்றால் என்ன? அதில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

60. ஒரு பொது வரையறை நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?

61. "பம்பாய் நேரடி வணிகம்" (BOLT) எவ்வாறு செயல்படுகிறது? அதன் ஆற்றல்கள் யாவை?

62. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகளை விவரிக்க?

63. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகளை வரைக.

பிரிவு ஈ

ஏதேனும் 4 கேள்விகளுக்கு பதில் எழுதுக.

எல்லா கேள்விகளுக்கும் சம மதிப்பெண் உண்டு

பதில் இரண்டு பக்கத்துக்கு மிகாமல் இருக்கவும்,

**(4 x 20 = 80)**

64. அமைப்பின் கோட்பாடுகளை சுருக்கமாக விவரிக்க.

(அல்லது)

சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன? சட்டமுறை அறிக்கையில் காணப்படும் முக்கிய தகவல்களை சுருக்கமாக விவரி.

65. அரசுத் தொழில்களின் நோக்கங்களை விளக்குக.

(அல்லது)

செபியின் பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குக.

66. தனி நபர் வணிகத்தின் நன்மைகள், குறைகளை விவரி.

(அல்லது)

பங்குகட்கும் கடனீட்டுப் பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

67. கூட்டுறவு அமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளைச் சுருக்கமாக வரைக.

(அல்லது)

கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

# மதிப்பீடு முறை

பிரிவு அ **40 x 1 = 40**

விடைகள் சரியாக இருந்தால் மட்டும் மதிப்பெண் வழங்கவும்

1, ஆ 2. இ 3. அ 4. இ 5. அ 6. ஆ 7. இ 8. இ 9. அ 10. அ

11. இ 12. இ 13. ஆ 14. ஆ 15. இ 16. இ 17. அ 18. ஈ 19. அ 20. அ

21. வாரிய அமைப்பு
22. வரையறையில்லாதது
23. வரையறா பொறுப்பு
24. இரண்டு
25. உரிமையாளர்கள்
26. புதிய
27. இணைத்து பணியாற்றுதல்
28. பொதுச்சேவை அல்லது பொது நலன்
29. ஒரு நபர் மட்டும் தேவை
30. 20
31. இரண்டு
32. செயல்முறை விதிகளில்
33. உடமை
34. சில்லரை வணிகம்
35. தனியார்
36. ஒப்புக்கொண்ட விகிதம்
37. குவி முன்னுரிமைப்பங்குகள்
38. சிறப்புத் தீர்மானம்
39. பரஸ்பர நிதிகள்
40. உறங்கும் கூட்டாளி

பிரிவு - ஆ **10 x 4 = 40**

விடைகள் முழுவதும் சரியாக இருந்தால் முழு மதிப்பெண் கொடுக்கவும். விடை பாதி சரியாக இருந்தால் பாதி மதிப்பெண் கொடுக்கவும்.

பிரிவு - இ **8 x 5 = 40**

விடை சரியாக இருந்தால் முழு மதிப்பெண் கொடுக்கலாம். பாதி சரியாக இருந்தால் அதற்குத்தகுந்த மதிப்பெண் கொடுக்கலாம்.

பிரிவு - ஈ **4 x 20 = 80**

ஏதேனும் பத்து கருத்துக்களை எழுதியிருந்தால் முழு மதிப்பெண் கொடுக்கலாம். குறைவான கருத்துக்கள் கொடுத்து இருந்தால் மதிப்பெண்களை குறைத்து கொள்ளவும்.